முன்னிலை: திரு.சதாம்உசைன், B.A.,L.L.B.,
(மு.கூ.பொ) குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 100/2024

அ.சா.4

2026–ம் ஆண்டு ஜுலை 21–ம் தேதி செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சி –4 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சசிகலா | தொழில் | |
| கணவர் பெயர் | அறிவழகன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.30 மணி,

Accused A1)Sanjay, A2)Arunkumar, A3)Mathiyalagan are present. Advocate Mrs.Arunadevi present for all accused. APP Mr.M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் எம்.ஓலைப்பட்டி காட்டுவளவில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியும். கடந்த 27.08.2023 ஆம் தேதி மாலை 06.00 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள சொசைட்டிக்கு சென்றேன். சடையன் என்பவரின் வீட்டருகே சஞ்சய் என்பவர் ஞானசேகரன் என்பவரை கல்லால் அவரது காலின் மீதும், கட்டையால் அவரது நெஞ்சின் மீதும் அடித்தார். அப்போது கீதா, தேன்மொழி, நந்திவர்மன் ஆகியோர் விலக்க வந்தபோது சஞ்சய் கீதா என்பவரின் தலைமுடி மற்றும் சுடிதாரை பிடித்து இழுத்துவிட்டார். அவரது சுடிதார் கிழிந்துவிட்டது. பின்பு கடைசியாக சஞ்சய் அங்கிருந்து செல்லும்போது ஞானசேகரனை பார்த்து எப்போது இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொன்னார். பின்பு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

கற்றறிந்த எதிரிகள் தரப்பு வழக்கறிஞரால் மனுதாக்கல் செய்யப்பட்டு, அம்மனு

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:36:59 +0530

அனுமதிக்கப்பட்டு குறுக்கு விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.35 மணி.**

SADHAMHUSAIN S

Digitally signed by SADHAMHUSAIN S
Date: 2026.07.21 17:37:02 +0530